திரு. எம். தேவராசன்: இந்த மின்சாரம் திருட்டுப் போவதை 'லைன் லாஸ்' என்ற பெயரிலே சொல்லப்படுகிறது என்பது உண்மையா? லைன் லாஸைக் குறைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: ஏற்கெனவே பதிலிலே விளக்கமாகச் சொல்லியிருக்கிறேன்.

திரு. ஏ. எம். இராஜா: தலைவரவர்களே, இந்தக் கம்பிகள் காப்பர் கண்டக்டர்களாக இருப்பதால்தான் திருட்டுப்போகின்றன. ஆகவே, எங்கெங்கே காப்பர் கண்டக்டர்கள் இருக்கின்றனவோ அவைகளை எடுத்துவிட்டு, அவைகளுக்குப் பதிலாக அலுமினிய கண்டக்டர்களைப் போட மின்சார வாரியத்திற்கு அரசு ஆலோசனை கூறுமா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: காப்பர் கண்டக்டர்கள் போடுவதுதான் நல்லது என்று சொல்கிறார்கள். காப்பர் கண்டக்டர்கள் போதுமான அளவுக்குக் கிடைக்காததால் இப்போது அலுமினிய கண்டக்டர்களைப் போடுகிறார்கள். ஆகையால் இருக்கக்கூடிய காப்பர் கண்டக்டர்களை எடுத்துவிடுவது என்பது உசிதமல்ல.

Equipments for Tuticorin Thermal Plant

*504 Q.THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether it is a fact that the Electricity Board have placed orders with Bharat Heavy Electricals Ltd., for the supply of equipment for the Tuticorin Thermal Plant; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) & (இ) ஆம். 2 கோடி ரூபாய் முன் பணமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, காலதாமதத்தைத் தவிர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? எப்போது எக்விப்மென்ட் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

1973 நவம்பர் 29]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, 1975 அக்டோபரில் கிடைக்கும். இதற்கு 40 கோடி செலவாகும். விரைவிலே வழங்குவதற்கு ஏற்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, அனல் மின்சார நிலையங்களுக்கு ஏற்ற சாதனங்களைத் தயாரிக்கின்ற தொழிற்சாலை திருச்சியில் இருக்கிறது. பக்கத்திலே நெய்வேலி நிலக்கரி இருக்கிறது. ஆகையால் அங்கே ஒரு அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்துவதற்கான வாய்ப்பு இருக்கிறது என்று அமைச்சரவர்கள் ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இவைகளை மனதில் வைத்து, திருச்சியிலே ஒரு அனல் மின்சார நிலையத்தை ஏற்படுத்துவதற்கு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தற்போது இதைப்போன்ற திட்டம் ஒன்றை தயாரித்து மத்திய அரசுக்கு அனுப்ப இருக்கிறோம்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : இந்த தூத்துக்குடி அனல் மின்சார நிலைய வேலை எப்போது முடிவடையும் ? அதிலிருந்து எப்போது மின்சாரம் கிடைக்கும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : சாதாரணமாக இந்தத் திட்டம் 6 ஆண்டில் முடிவடையவேண்டும். ஆனால் இப்போது 5 ஆண்டிலே முடிவடைவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : சார், தூத்துக்குடி அனல் மின்சார திட்டத்தின் தொடர்பாக மேட்டூரிலும் ஒரு அனல் மின்சார நிலையம் ஏற்படுத்தலாம் என்று சர்வே நடத்தப்பட்டு, இடம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இது சம்பந்தமாக அரசாங்கம் என்ன முடிவு எடுத்திருக்கிறது ? எப்போது தொடங்கப்படும் ? தொடங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இத்திட்டம் திட்டக் குழுவின் விவாதத்தில் இருக்கிறது. இன்னும் முடிவு சொல்லப்படவில்லை.

[1973 நவம்பர் 29

திரு. எம். தேவராசன் : தலைவரவர்களே, இந்த பாண்டியாறு-புன்னம்புழா நீர்மின்சாரத் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இது இரண்டு மாநிலங்களுக்குள்ள பிரச்சனை. ஆகவே, இரு மாநிலங்களினிடையே ஒரு முடிவு ஏற்பட்ட பின்னுல்தான் இதுபற்றி தெளிவான கருத்து சொல்ல முடியும்.

திரு. சி. ஆறுமுகம் : கல்பாக்கத்திலே நிறுவப்படும் அணு மின்சார நிலையத்திலிருந்து நமக்கு எந்த ஆண்டில் மின்சாரம் கிடைக்கும் ? இப்போது மத்திய அரசு தலையிட்டு, அந்த நிலையத்திற்கு வெளிநாட்டிலிருந்து வரவேண்டிய சில முக்கியமான பொருட்கள் நிறுத்தி வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. இதில் ஏதாவது அரசியல் கண்ணேட்டம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, 1973–74-ம் ஆண்டு முதல் பிரிவு உற்பத்தியை தொடங்க வேண்டுமென்று அனுமதிக்கப்பட்டிருந்தது. இப்போது முதல் பிரிவு 1977-ம் ஆண்டுதான் உற்பத்தியைத் தொடங்கும் என்று கருதப்படுகிறது.

திரு. ஆ. பரந்தாமன் : தலைவரவர்களே, தமிழகத்திலே இருக்கிற மின்சார வாரியத்திற்குத் தேவைப்படுகிற பொருட்களை—சில இயந்திரங்களை முழுமையாகப் பிற நாடுகளிலிருந்துதான் வாங்க வேண்டியிருக்கிறது. அதற்கு வெளிநாட்டு கொள்கை அடிப்படையில் அந்நியச் செலாவணி ஒதுக்கித் தருவதில் கால தாமதம் ஏற்படுகிறது என்பது நமக்குத் தெரியும். இப்போது அந்நியச் செலாவணி ஒதுக்கீடு எந்த நிலையில் இருக்கிறது? மத்திய அரசு நமக்கு 'பாரின் எக்ஸ்சேஞ்ச் ரிலீஸ்' செய்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அது பொதுவான நாட்டுக் கொள்கைத் திட்டம். அந்நியச் செலாவணியை ஒதுக்குவது மத்திய அரசின் நிலையைப் பொறுத்தது.